


# “ஐம்பெரும் முழக்கங்களே நமக்கான அடித்தளம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஏழாவது அமர்வுக்குத் தலைமை வகித்து கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் அவர்கள் ஆற்றிய உரை:**

“இதற்கு முன்பு நடந்த அரங்குகளிலும், இதைத் தொடர்ந்து நடக்கவிருக்கின்ற அரங்குகளிலும் அந்தந்தத் துறையில் வல்லுநர்களான, கழகத்தின் ஆற்றல் மிக்க சொற்பொழிவாளர்கள், பொருளாதார வல்லுநர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோர் பேசிய நிலையில், பேசவிருக்கின்ற நிலையில், இந்த இயக்கத்தின் உயிர் கொள்கையை எடுத்துச் சொல்லக்கூடிய, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லக்கூடியவர்களாக இங்கே இந்த இளம் பேச்சாளர்கள் திரண்டிருக்கிறார்கள்.

## முழக்கங்கள்

கொள்கை உள்ள கூட்டம்தான் அறிவுத் திருவிழாவை நடத்தும். கூட்டத்தைக் கூட்டி அறிவை திருவிழாவாக்குகின்ற வலிமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு. நம்முடைய கொள்கை முழக்கத்தை முன்னெடுத்து இங்கே இந்த இளம் பேச்சாளர்கள் தொடர்ந்து பேசவிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக, ஐம்பெரும் முழக்கங்களைப் பற்றி. எதற்காக இந்த முழக்கங்கள்?

ஓர் இயக்கம் தன் கொள்கையை மக்களிடம் கொண்டு செல்வதற்கு முழக்கங்கள் தேவைப்படும். காரல் மார்க்ஸும், பிரடெரிக் ஏங்கெல்சும் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை வெளியிடுகின்ற நேரத்திலே, ‘உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்’ என்ற முழக்கத்தை முன்வைத்தார்கள்.

இந்திய சுதந்திரப் போராட்டம் நடைபெற்றபோது, மகாத்மா காந்தி ‘வெள்ளையனே வெளியேறு’ என்ற முழக்கத்தை முன்வைத்தார். அமெரிக்காவிலே கறுப்பின மக்களின் விடுதலைக்காக அறவழியிலே போராட்டம் நடத்திய மார்ட்டின் லூதர் கிங், ‘எனக்கு ஒரு கனவு உண்டு’ என்ற முழக்கத்தை முன்வைத்தார். அதுபோல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு, இந்த இயக்கத்தை தலைமையேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970–ஆம் ஆண்டு பிப்ரவரி 22–ஆம் நாள், அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, நடைபெற்ற முதல் மாநாடான திருச்சி மாநாட்டிலே ஐம்பெரும் முழக்கங்களை நமக்கு கொடுத்தார். அதுதான் நமக்கான அடித்தளமாகும்.

## ஐந்து என்னும் எண்

தமிழர்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து வைத்தார்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. இயற்கை தன் ஆற்றலை நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ என்று ஐம்பெரும் பூதங்களாக வைத்திருக்கிறது. இஸ்லாமியர்கள் தங்களுக்கான ஐந்து கடமைகளைச் சொல்கிறார்கள். அதுபோல் கழகத்துக்கு ஐம்பெரும் முழக்கத்தைக் கொடுத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த முழக்கங்களில் முதல் முழக்கம்தான் ‘அண்ணா வழியில் அயராது உழைப்போம்.’

பிரான்ஸ் தேசத்திலே மன்னர் இறந்துவிட்டால் ‘மன்னர் இறந்துவிட்டார். மன்னர் வாழ்க’ என்று அறிவிப்பார்கள். மன்னர் இறந்து போயிருக்கலாம். ஆனால், அவர் உருவாக்கிய அந்த அரசாட்சியின் மரபு தொடரும். அதுபோல் அண்ணா மறைந்திருக்கலாம், அவர் உருவாக்கிய கொள்கையும் அந்த இயக்கமும் தொடரும் என்பதற்காகத்தான் ‘அண்ணா வழியில் அயராது உழைப்போம்’ என்கின்ற முழக்கத்தை நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் முதல் முழக்கமாக வைத்தார்.




**கோவி.லெனின்**
**கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்**

காக்கப்பட்டிருக்கிறது என்கிறார்களே, அதற்குப் பெயர்தான், ‘ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்’ என்பது.

மூன்றாவது, ‘இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்.’ இந்தித் திணிப்பு என்பதும் ஓர் ஆதிக்கம். அந்த ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய வேண்டும் என்பது அண்ணாவின் கொள்கை, பெரியாரின் லட்சியம். அதை, பேரறிஞர் அண்ணா தனக்குக் கிடைத்த வாய்ப்பிலே இருமொழிக் கொள்கை என்கின்ற சட்டமாக நிறைவேற்றி நிலைநாட்டினார். இன்றைய கழகத் தலைவரும் இந்தித் திணிப்பு எதிர்ப்பைத் தொடர்கிறார். நம்முடைய எதிர்கால தலைவராக விளங்கக்கூடிய இளைஞர் அணிச் செயலாளர் அவர்களும், ‘இந்தி தெரியாது போடா’ என்று எழுதப்பட்ட உடையை அணிந்துகொண்டு, அவர்களுக்கு பதில் அளிக்கிறார்.

நான்காவது முழக்கம், ‘வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்.’ வறுமையில் இருக்க யாருமே விரும்ப மாட்டோம். இன்றைக்கு இருக்கிற நிலையைவிட உயர்ந்த நிலையில் நாம் இருக்க வேண்டும், நம் பிள்ளைகள் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதுதான் எந்த ஒரு சமுதாயத்திலும், குடும்பத்திலும் உள்ள நடைமுறை. ஆனால், ஏன் ‘வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்’ என்கிறோம்? எந்த ஓர் அரசு மக்கள்

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

அறிவுத் திருவிழாவில் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளி யிடப்பட்ட ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூல் ‘முத்தமிழறிஞர் பதிப்பகம் வெளியிடும் 25–வது நூல்.

கழகத்தின் 75–வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்தப் புத்தகத்தை உருவாக்குவதற்காக இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப் பட்ட ஆலோசனைக் குழுவில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, ஊடகவியலாளர்கள் ஆர்.விஜயசங்கர், ப.திருமாவேலன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் ஆகியோர் இடம்பெற்றனர்.

தி.மு.க 75 ஆண்டுகளாக அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாட்டுத் தளங்களில் செலுத்திய பங்களிப்பு குறித்து 1,120 பக்கங்களில் உருவான இந்தப் புத்தகப் பணி, மூன்று மாத உழைப்பில் உருவாக்கப்பட்டது.



அண்ணா உருவாக்கிய இருமொழிக் கொள்கை. இன்றைக்கு, தமிழ்நாட்டின் பாதுகாவல் அரணாக இருப்பது மட்டுமல்ல, மராட்டியத்துக்கும், கர்நாடகத்துக்கும், வங்காளத்துக்கும், மற்ற மாநிலங்களுக்கும் முன்னோடியாக இருக்கிறது என்றால், அதுதான் அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்பதன் பொருள்.

அடுத்தது, ‘ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீர்வோம்.’ எவர் மீதும் எவரும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது, அவரவர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். அதற்காகத்தான் சுயமரியாதை இயக்கமும், நீதிக்கட்சியும் இணைந்தபோது திராவிடர் கழகம் என்ற பெயர் மாற்றத் தீர்மானத்தையே தந்தை பெரியார் அவர்கள் பேரறிஞர் அண்ணாவிடம் கொடுத்து, அண்ணாதுரை தீர்மானம் என்று அதை நிறைவேற்றினார்.

இந்த இயக்கம் வலுவோடு, கொள்கையுடன் இருக்க வேண்டும் என்றால், ஆதிக்கங்கள் தகர்க்கப்பட வேண்டும். அந்த ஆதிக்கம், சாதி ரீதியாக இருக்கலாம், பாலின ரீதியாக இருக்கலாம், மொழி ரீதியாக இருக்கலாம். மதவாதமாக இருக்கலாம். எல்லா ஆதிக்கங்களும் ஒழிக்கப்பட வேண்டியவையே. இங்கே இதற்கு முன்பு நடந்த அமர்வில் நம்முடைய திருநங்கையரும், மாற்றுத் திறனாளிகளும் இந்தச் சமுதாயத்தில் எப்படி ஒடுக்கப்பட்டார்கள், இந்தத் திராவிட இயக்கம், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகு, அவர்களுடைய உரிமைகளும்

நலனைக் காக்காமல், அது தன்னுடைய விருப்பத்தை மட்டும் தன்னுடைய சுயநலத்துக்காக மட்டும் நிலைக்கிறதோ, நீட்டிக்கிறதோ அப்போது அங்கே வறுமை நீடிக்கும், வன்முறை தலை எடுக்கும்.

நீங்கள் பக்கத்திலே இருக்கக்கூடிய நேபாள நாட்டிலே இப்போது நடந்ததைப் பார்த்திருப்பீர்கள். அங்கே மன்னராட்சி நடைபெற்றது. அதன் பிறகு, ஜனநாயகம் என்கின்ற பெயரிலும் அங்கே ஒரு பொம்மை ஆட்சி நடைபெற்றது. மக்கள் கொந்தளித்தார்கள், அரசு கட்டடங்களைத் தகர்த்தார்கள், ஆட்சியாளர்களின் வீடுகளை எரித்தார்கள். இலங்கையிலும் பங்களாதேஷிலும் அதே நிலைமைதான் ஏற்பட்டது. வறுமையை ஒழிக்காத அரசுகள் நீடிக்கும்போது வன்முறை தலையெடுக்கும். ‘வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்’ என்று சொன்ன இந்த இயக்கம், முத்தமிழறிஞர் கலைஞரின் முழக்கத்தால்தான் நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டு, லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு, பட்டினிச் சாவு இல்லாத மாநிலமாக இந்த மாநிலத்தை மாற்றிக் காட்டியிருக்கின்றோம். ரத்தத் துளிகளால் நடக்க வேண்டிய போராட்டத்தை, தன் ஒரு சொட்டு மைத்துளியால் நிறைவேற்றிக் காட்டி கையெழுத்திட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதுதான் ‘வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்’ என்பது.

ஐம்பெரும் முழக்கங்களிலே ஐந்தாவது முழக்கம் மிக முக்கியமான முழக்கம். ‘மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி’ - இது திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டுக்காக மட்டுமல்ல, மாநிலங்களின் ஒன்றியமான இந்தியாவுக்கே முன்வைத்த முழக்கம். பல்வேறு மொழிகள், பல்வேறு மாநிலங்கள், பண்பாட்டைக் கொண்ட மக்கள் வாழக்கூடிய ஒன்றியம் இது. இதைத்தான் நம்முடைய அரசியல் சட்டம் சொல்கிறது. அந்த அரசியல் சட்டத்தைக் காப்பாற்றுவதற்குதான் மாநிலத்தில் சுயாட்சி என்கின்ற முழக்கத்தை திராவிட முன்னேற்றக் கழகம் முன்வைக்கிறது.

மாநிலங்கள் எல்லாம் சுயாட்சி பெற்று, உரிமையுடன் செயல்படக்கூடிய நிலையில், ஒன்றிய அரசு இந்த மாநிலங்களின் கூட்டுத்தன்மை யுடன் செயல்படுவதற்கு பெயர்தான் கூட்டாட்சி. ராணுவம், வெளியுறவுக்கொள்கை, கரன்சி அச்சடிக்கும் அதிகாரம் போன்றவற்றை ஒன்றிய அரசு வைத்துக்கொண்டு, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல முக்கியமான உரிமைகளை மாநிலங்களுக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் ‘மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி.’

திராவிட முன்னேற்றக் கழகம் சூளுரைத்தால் அது நிறைவேறியே தீரும். அண்ணா வழியில் அயராது உழைப்போம். கலைஞரின் மன உறுதியைப் பெறுவோம். கழகத் தலைவரின் உழைப்பை நாம் கற்றுக்கொள்வோம், இளந்தலைவரின் வியூகத்தில் செயல்படுவோம். ஐம்பெரும் முழக்கங்களையும் நிலைநாட்டுவோம்!”